Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.242/2025 PW-5**

| | |
|---|---|
| Name | : வீராசாமி |
| Father / Husband name | : துரைக்கண்ணு |
| Village | : சித்தேரிப்பட்டு |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.07.2026

A1, A2 present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாயம் மற்றும் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். சாட்சி கோவிந்தசாமி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்தக்கையொப்பத்தை நான் கடந்த 12.04.2025 அன்று காலை 9.00 மணியளவில் எங்கள் ஊர் திருவிழாவின்போது பாஸ்கர், குபேந்திரன், ரவீந்திரன் ஆகியோர்களுக்கிடையில் நடந்த சண்டை சம்மந்தமாக ரோசணை காவல் நிலையத்திற்குசென்றபோது மேற்படி கையொப்பம் செய்தேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

சண்டை எங்கு நடந்தது என்றால் சித்தேரிப்பட்டு மேட்டுத்தெருவில் சேட்டு மற்றும் இளங்கோவன் வீட்டிற்கு அருகில் நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 12.04.2025 ந்தேதி காலை 11.00 மணிக்கு நானும் கோவிந்தசாமியும் எங்கள் ஊரிலுள்ள சேட்டு வீட்டின் அருகே இருந்தபோது ரோசனை காவல்

நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் கோவிந்தசாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான், சேட்டு வீட்டின் அருகே இருந்தபோது விசாரித்து அக்கம் பக்கம் வீட்டிலுள்ளவர்களை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகசரிலுள்ள கையொப்பத்தை எங்கு செய்தேன் என்றால் சேட்டு வீட்டின் அருகே செய்தேன். நான் ரோசனை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை, ஆனால் காவல் நிலையம் சென்றேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகசரிலுள்ள கையொப்பம் எங்கு செய்தது என்றால் சேட்டு வீட்டின் அருகே செய்தேன். ஆஜர் எதிரிகளை பாஸ்கர் தாக்கிவிட்டதாக பதிவு செய்யப்பட்ட வழக்கிலும் நான் பார்வை மகசர் சாட்சி என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் குற்ற எண் தெரியுமா என்றால் தெரியாது. என்ன சட்டப்பிரிவு என்றால் தெரியாது. எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்றால் 4 பக்கம் எழுதியிருந்தது, ஒரு பக்கம் கையொப்பம் செய்தேன். 4 பக்கம் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ஊர் பிரச்சனை என்பதால் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். சேட்டு மற்றும் இளங்கோவன் வீட்டிற்கு அருகில் கையொப்பம் செய்யவில்லை, காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.